**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 13/14

வாக்குமூலம்..பிவா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில் | |
| த/பெ. | சுப்பையா | வயது | 38/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 17.03.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல்விசாரணையின் தொடர்ச்சி**

05.07.1934-ம் தேதிய முருகையா பிள்ளை செல்லத்தம்மாளுக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ- 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.09.1938-ம் தேதிய செல்லத்தம்மாள் காத்தாயி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணம் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் அது பி.வா.சா.ஆ- 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.04.1952-ம் தேதிய குப்பம்மாள் 3-ம் பிரதிவாதிக்கு அவரது தாயர் சிவகாமி அம்மாளுக்கும் கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ- 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.06.1942-ம் தேதியில் சவுந்திரத்தம்மாள் காத்தாயிக்கும், குப்பாம்மாளுக்கும் கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ- 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.03.1974-ம் தேதிய 3-ம் பிரதிவாதியும், சிவகாமி அம்மாளும் உண்ணாமலைக்கும், சுப்பிரமணியனுக்கும் கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்று வாதி

தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ- 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.03.1991-ம் தேதியில் சுப்பிரமணியனும், உண்ணாமலையும் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்று வாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ- 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான 02.03.2003 , 22.03.1999, 13.02.2010, ஆகிய தேதிகள் இட்ட கிஸ் து ரசீதுகள் எண்ணிக்கை 3 தாக்கல் செய்கிறேன். மேற்படி ரசீதுகள் வழக்கு சொத்திற்கு உரியது இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ- 15 ஆக எண்ணிக்கை 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.01.1992-ம் தேதிய 1-ம் பிரதிவாதி மனைவி நாகரெத்தினம் அவர்களுக்கு உண்ணாமலை அம்மாள் சுப்பிரமணியன் ஆகியோர் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ- 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நகர புல எண் 47 ற்கான பு ல வரைபடம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ- 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.02.2009-ம் தேதிய நகர நில அளைவயின் செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ- 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.